**OPEN ACCESS**

Volume: 5

Issue: 2

Month: October

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.08.2020

Accepted: 15.09.2020

Published: 01.10.2020

Citation:
Murugesapandian, N. (2020). Treatment of Nature in Sangam Poetry. *Shanlax International Journal of Tamil Research, 5*(2), 1–11.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i2.3480

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Treatment of Nature in Sangam Poetry

**N. Murugesapandian**

http://orcid.org/0000-0002-1831-7730

**Abstract -** Sangam poems are a document of how the Sangam Tamils faced nature. People who lived during the Sangam period sought to understand the nature around them. They discovered that the vast energies of nature were understood as mysteries that could not be understood by humans easily. The activities and thoughts among the ancient Tamils were tried to understand the relationship between nature and human beings are recorded in the Sangam Poems . The influence of geography in shaping the culture and characteristics of the ancient Tamils is compelling. The poems of the Sangam poets are based on the composition of flora and fauna and the composition of flora and fauna based on nature and tradition. Since the Sangam poets were nature-obsessed, they naturally recorded detailed information about plants and animals in their poems. In the daily life of the people there is a variety of information about nature, both in terms of coding and application. Sangam poems are inspired by contextual recordings that depict the background of human life, without simply copying the metaphor, implicit, and imaginary nature of the Sangam poets' descriptions of nature. The expressions of the Sangam Tamils trying to reconcile with them are recorded in the Sangam poems. This article describes the treatment of nature in Sangam literature.

**Keywords:** Sangam literature, Five lands Classification, Worship of Flowers, Worship of Nature, Worship of Wood, Worship of Water, Celebrating Nature.

**References**

1. Varatharajan (2018), M. Pazhanthamil Ilakkiyathil Iyarkai. Paari Nilayam, Chennai.
2. Manickam, V.Su. (2013). Tamil kaathal, Meenakshi Puthaka Nilayam, Madurai.
3. Thaninayaga Adiagam. (2014). Tr by Poorana Chandran. Nila amaippum Tamil kavithaiyum. NCBH, Chennai.
4. Krishnamoorthy. K.V. (2011). Tahamilarum Thavaramum. Bharathhidasan University, Trichy.

# சங்கக் கவிதையில் இயற்கை

*ந. முருகேசபாண்டியன்*

***ஆய்வுச் சுருக்கம்:*** *இயற்கையைச் சங்கத் தமிழர் எங்ஙனம் எதிர்கொண்டனர் என்பதற்கான ஆவணமாகச் சங்கப் பாடல்கள் விளங்குகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களைச் சுற்றிலும் காட்சியளிக்கிற இயற்கையைப் புரிந்துகொள்ள முயன்றனர்; இயற்கையின் பிரமாண்டமான ஆற்றல்கள், மனிதர்களால் விளங்கிட இயலாத புதிர்களாக விளங்கியதைக் கண்டறிந்தனர். இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவினைப் புரிந்துகொள்ள முயன்ற தமிழர்களின் செயல்பாடுகள், எண்ணங்கள், சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன. பண்டைத் தமிழர்களின் பண்பாட்டையும் பண்புகளையும் உருவாக்குவதில் நிலவியலின் செல்வாக்கு, அழுத்தமானது. இயற்கை சார்ந்து, மரபின் அடிப்படையில் நிலவெளி, காலம், தாவரங்களின் தொகுப்பு, விலங்கினங்களின் தொகுப்பு அடிப்படையில் சங்கப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. சங்கப் புலவர்கள் இயற்கையை உற்றுநோக்குகிற இயல்புடையவர்களாக இருந்தமையினால், தாவரங்கள், உயிரினங்கள் பற்றிய நுணுக்கமான தகவல்களைப் பாடல்களில் இயல்பாகப் பதிவாக்கியுள்ளனர். மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறியீட்டுநிலையிலும், பயன்பாட்டு நிலையிலும் இயற்கை குறித்த பல்வேறு தகவல்கள், இடம் பெற்றிருக்கின்றன. சங்கக் கவிஞர்களின் இயற்கை விவரிப்பில் உவமை, உள்ளுறை, படிமம் இயற்கையை அப்படியே நகலெடுக்காமல், மனித வாழ்வின் பின்புலமாகக் காட்சிப்படுத்துகிற சூழல் சார்ந்த பதிவுகள், சங்கக் கவிதைகளுக்கு அழகூட்டுகின்றன. கடல், மலை, ஆறு, காடு போன்றவற்றைச் சிதலமாக்காமல், சங்கத் தமிழர் அவற்றுடன் இணக்கமான முறையில் ஒத்துப்போக முயன்றதன் வெளிப்பாடுகள், சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன. சங்க இலக்கியத்தில் இயற்கைச் சித்திரிப்பு குறித்த பதிவாகக் கட்டுரை விரிந்துள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், ஐந்திணைப் பகுப்பு, இயற்கையைக் கொண்டாடுதல், பூக்களைப் போற்றுதல், இயற்கை வழிபாடு, மர வழிபாடு, நீர்நிலை வழிபாடு*

**மண்டிணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்புதைவரு வளியும்**
**வளித்தலைஇய தீயும்**
**தீமுரணிய நீருமென்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்தியற்கை**

**(புறநானூறு: 2)**

பண்டைத் தமிழர், சூழலியல் சார்ந்த தாவரங்கள், உயிரினங்கள் உள்ளிட்ட பருண்மையான பொருட்கள் எல்லாம் ஐந்து பூதங்களால் ஆனவை என்ற கருதினர். தொல்காப்பியர் நிலம், நெருப்பு, நீர், வளி, விசும்பு ஆகியன கலந்ததை உலகம் என்று வரையறுத்துள்ளார். தமிழ் மொழியின் புழங்குவெளியில் இயங்குகிற மக்கள் கூட்டத்தில், பல்வேறு குடிகளின் ஒருங்கிணைவில் உருவானது தான் தமிழ்ச் சமூகம். கண்ணெதிரே தோன்றும் இயற்கையாக உருவாகியிருந்த மலை, காடு, வயல், கடலோரம் என வேறுபாடுடைய நிலவெளிகளை உலகம் என அறிந்து, நானிலம் என்றனர் தமிழர். நான்கு வகையான நிலங்கள், திணைகள் எனக் குறிக்கப்பட்டதுடன், அவற்றுடன் தொடர்புடைய தாவரங்கள், உயிரினங்கள்

ஆகியவற்றுடன் ஒன்று சேர்ந்தவையே நான்கு வகைச் சூழல் தொகுப்புகள் என்று கருதப்பட்டன. ஒவ்வொரு திணை நிலத்திற்கும் அந்நிலத்தில் சிறப்பாக விளங்கிய பூவைக்கொண்டு பெயரிட்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பூக்களின் பெயரால் திணைசார் புரிதலுடன் பாகுபடுத்திய தமிழர்களின் முறைமை, தனித்துவமானது. சூழல் தொகுதிகள் காலப்போக்கில் வேறுபட்ட காரணங்களால், சிதைவடைந்து அழிவிற்குள்ளாகிடும்போது உருவாகிடும் சூழல் தொகுப்பு, அந்நிலத்தில் பூத்திருக்கிற பாலை என்ற பூவின் பெயரால் குறிக்கப்பட்டது. நிலத்தின் அடிப்படையில் உருவான ஒவ்வொரு சூழல் தொகுதிக்கும் முதல், கரு, உரிப் பொருள்களைக் கண்டறிந்தது, பண்பாட்டுச் சூழலியல் சார்ந்ததாகும். பண்டையத் தமிழர் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்தனர்; இயற்கையைக் கடவுள் எனக் கருதினர். இயற்கையானது "சூழல்" என்ற சொல்லினாலும் அறியப்பட்டது. சங்கத் தமிழர், சூழலைப் போற்றி வளர்த்துத் தங்களைக் காத்துக்கொண்ட செயலில், சூழல் பேணப்பட்டால்தான் தங்களுடைய வாழ்க்கை வளமடையும் என அறிந்திருந்த கருத்தியல், புலப்படுகிறது.

இயற்கையைச் சங்கத் தமிழர் எங்ஙனம் எதிர்கொண்டனர் என்பதற்கான ஆவணமாகச் சங்கப் பாடல்கள் விளங்குகின்றன. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதிகள் அற்ற சூழலில் வாழ நேர்ந்திட்டாலும், தங்களைச் சுற்றிலும் காட்சியளிக்கிற இயற்கையைப் புரிந்துகொள்ள முயன்றனர்; இயற்கையின் பிரமாண்டமான ஆற்றல்கள், மனிதர்களால் விளங்கிட இயலாத புதிர்களாக விளங்கியதைக் கண்டறிந்தனர். இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவினைப் புரிந்துகொள்ள முயன்ற தமிழர்களின் செயல்பாடுகள், எண்ணங்கள், சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன. பண்டைத் தமிழர்களின் பண்பாட்டையும் பண்புகளையும் உருவாக்குவதில் நிலவியலின் செல்வாக்கு, அழுத்தமானது. கடவுள் வழிபாடு என்பது, நிலம் சார்ந்த இயற்கைப் பின்புலத்தில் திணைதோறும் மாறுபடுவதைச் சங்க இலக்கியம் பதிவாக்கியுள்ளது. தமிழ் மண்ணுக்கேற்ப உருவான நிலம் சார்ந்த பண்பாட்டின் எல்லா அடையாளங்களும் சங்கக் கவிதைகளில் பதிவாகியுள்ளன. சுருக்கமான முறையில் தண்ணுணர்ச்சிக் கவிதைகளில் இயற்கை வருணணைகள் இடம் பெற்றிருப்பது, சங்கப் பாடல்களின் சிறப்பியல்பு. தமிழக நிலவெளியில் நிலவிடும் வெப்பமான தட்பவெப்பம் காரணமாகக் குளிர்ச்சியான மர நிழல்களும், நீர்நிலைகளில் நீராடுதலும், பூக்களைச் சூடிக்கொள்வதும் மக்களால் விரும்பபபட்ட சூழல், புலவர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. செழிப்பான வாழ்க்கைக்குத் தேவையான மழையை வரவேற்றுப் பாடியுள்ள பாடல்கள் கவனத் திற்குரியன. தமிழர்கள், ஈடு இணையற்ற எழிலானது என்ற பொருளில் மேகத்தைக் குறித்தனர். காத்திருந்த பெண், திடீரெனக் காதலனைச் சந்தித்தபோது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை

**நீர்மேற் புலமேபோல் புல்லென்றாள் வைகறை**
**கார் பெற்ற புலமேபோல் கவின்பெறும்**
***(நற்றிணை: 22)***

என்று புலவர் குறிப்பிடுவது, இயற்கை குறித்த கொண்டாட்டமாகும்.

நிலத்தை முன்வைத்திட்ட ஐந்து வகையான நிலப் பாகுபாட்டில் மக்களின் வாழ்வியல், சூழல் சார்ந்துதான் பின்னர் திணைகளாக உருவெடுத்தது. தொல்காப்பியர் திணைக் கோட்பாடு எழுதியதற்கான அரசியல் பின்புலமும்,

அந்தக் கோட்பாட்டு அடிப்படையில் எழுதப்பட்ட சங்கப் பாடல்கள் ஒருபுறம் எனில், கவிஞர்களின் தன்னெழுச்சியான மனநிலையின் வெளிப்பாடாக இயற்கையைச் சித்திரிக்கிற அசலான சங்கப் பாடல்கள் இன்னொருபுறமும் இருக்கின்றன. சங்கப் பாடல்கள் பெரிதும் கவிஞரின் தண்ணுணர்ச்சி மனநிலையின் வெளிப்பாடு என்ற புரிதலுடன் அணுகும்போது, படைப்பாக்கத்தில் இயற்கையை எப்படி அணுகினர் என்பது புலனாகும். நிலமும் பொழுதும் பிரிக்க முடியாதவை என்ற நிலையில் மொழியின் வழியாகச் சூழலைப் படைப்பாக்குவதன் மூலம், நிலமானது மக்களின் நினைவிற்குள் தகவமைக்கப்படுவது சங்க காலத்தில் தொடங்கியது. நிலம் என்ற புரிதல் ஏற்பட்ட பின்னர்தான் இனக்குழுத் தலைவன், குறுநில மன்னன், வேந்தன் என வேறுபட்ட அரசியல் சூழல்கள் தோன்றின.

ஐந்து வகையான நிலத்தின் பண்பாட்டுச் சூழல் குறித்த பண்டைத் தமிழர்களின் அறிவானது, இனவரைவியல், மானுடவியல் நோக்கில் முக்கியமானது. இயற்கை சார்ந்து, முழுமையான மரபின் அடிப்படையில் நிலவெளி, காலம் தாவரங்களின் தொகுப்பு, விலக்கினங்களின் தொகுப்பு அடிப்படையில் சங்கப் புலவர்கள் பாடல்கள் இயற்றிட உருவாக்கப்பட்ட மரபு, கவனத்திற்குரியது. அகத்தை முன்னிறுத்துகிற சங்கக் கவிதையில் யாருடைய பெயரும் குறிப்பிடுவதில்லை என்ற நிலையில், கவிஞர் தனது சொந்தக் காதல் அனுபவத்தைக் கவிதையாக எழுதினாலும், மரபு அவருக்குத் தடையாக விளங்கியது. அதேவேளையில் இயற்கை பற்றிய துல்லியமான அறிவு தேவை என்பது எழுதப்படாத விதியாகக் கவிஞருக்கு விதிக்கப்பட்டிருப்பதனால், பெரும்பாலான அகக்கவிதைகள், இயற்கையுடன் நெருக்கமாக இருக்கின்றன. எனவேதான் இயற்கையின் எந்தவொரு நிலவெளியையும் தோற்றத்தையும் சங்கக் கவிஞர்கள் விட்டு வைக்கவில்லை. ஓடையின் சலசலப்பு, அருவியின் முழவோசையை ரசிக்கிற மனநிலையுடன் ஒவ்வொன்றையும் ஓவியம் போலத் தீட்டுவதன் முன்னணியில் காதலர்கள் இருக்கின்றனர்.

தொல்காப்பியத்திற்கு முன்னும் பின்னும் எழுதப்பட்டுள்ள சங்கப் பாடல்களில் இயற்கையைப் பற்றிய பல்வேறு தகவல்கள் நேரடியாகவும், புனைவாகவும் சுட்டப்பட்டுள்ளன. இயற்கையான சூழலில் வாழ்ந்திட்ட தமிழர்களின் உணவுத் தேடல்தான் இயற்கையுடன் நெருக்கமான தொடர்பை உருவாக்குவதில் முதன்மை இடம் வகித்தது. அன்றாடம் விலங்குகளுடன் சேர்ந்து கவனத்துடன் வாழவேண்டிய நெருக்கடியான சூழல், மனிதர்களின் புலன்களைக் கூர்மைப்படுத்தியது. பெரு வெள்ளம், இடி, மின்னல், காட்டுத் தீ போன்ற இயற்கை உற்பாதங்கள், எப்பொழுதும் விழிப்புடன் இயற்கையைப் புரிந்திட வேண்டிய சூழலைச் சங்கத் தமிழர்களிடம் ஏற்படுத்தின. நற்றிணைப் பாடல் (172,) தலைவி, சிறுமியாக இருக்கும்போது நீருற்றி வளர்த்த புன்னை மரத்தைத் தன்னுடைய தங்கையாகக் கருதுகிற மனநிலை, இயற்கையின் மீது கொண்டிருக்கிற அன்பின் வெளிப்பாடு. காதல் வயப்பட்ட இளம் பெண், தன்னுடைய காதலனுடன் தொடர்புடைய குன்று, அதில் தவழ்கிற மேகம், வீழ்கிற அருவி, அங்கிருந்து ஆற்றில் அடித்து வரப்படுகிற செடி, கொடி, மரம், பூக்கள் போன்ற இயற்கைப் பொருட்களையும் நேசிக்கத் தொடங்குகிறாள்.

**நோய்பொராக் கண்டிசின் வாழிதோழி**
**தெண்திரைக்**
**கடல் ஆழ் கலத்தின் தோன்றி**
**மாலை மறையும் அவர் மணிநெடுங் குன்றே**
**(குறுந்தொகை:240)**

இதுவரை காதலன் வாழ்கிற குன்றைக் கண்டு ஆறுதலடைந்தேன். இப்பொழுது மாலை வேளை வர, கடலில் மூழ்கும் கலம் போல குன்று மெல்ல மறைவதால், நான் எபப்டி ஆறுதல் அடைவேன் எனப் புலம்புகிற தலைவியின் மனநிலை, இயற்கையுடனான நேசத்தைக் காட்டுகிறது.

சங்கப் புலவர்கள் இயற்கையை உற்று நோக்குகிற இயல்புடையவர்களாக இருந்தமையினால், தாவரங்கள், உயிரினங்கள் பற்றிய நுணுக்கமான தகவல்களைப் பாடல்களில் இயல்பாகப் பதிவாக்கியுள்ளனர். மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறியீட்டு நிலையிலும், பயன்பாட்டு நிலையிலும் இயற்கை குறித்த பல்வேறு தகவல்கள், இடம் பெற்றிருக்கின்றன. சங்கக் கவிஞர்களின் இயற்கை விவரிப்பில் உவமை, உள்ளுறை, படிமம், இறைச்சி போன்றவற்றைக் கையாளும்போது, இயற்கை நுட்பமாகப் பதிவாகியுள்ளது. குறிப்பாக மரம், செடி, கொடி போன்ற தாவரங்களை வர்ணிக்கும்போது, சங்கப் பாடல்கள், கவித்துவத்துடன் அறிவியல் உணர்வும் கலந்தவையாக இருக்கின்றன என்று தாவரவியல் பேராசிரியர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுவது, கவனத்திற்குரியது. கதிரவன், நிலவு, விண்மீன்கள், கோள்கள், வானம், காற்று, ஆறு, மலை, அருவி, கடல், மழை, மேகம் போன்றவற்றைப் பாடல் வரிகளாக்கியுள்ள சங்கப் பாடல்கள், இயற்கைக்கு நெருக்கமானவையாக உள்ளன. அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களை விவரிக்கையில் இயற்கைக் காட்சிகளுக்குச் சிறப்பிடம் தந்து, கவிதையாக்குதல் சங்கப் புலவர்களின் தனித்துவமாகும். வெறுமனே இயற்கையை அப்படியே நகலெடுக்காமல், மனித வாழ்வின் பின்புலமாகக் காட்சிப்படுத்துகிற சூழல் சார்ந்த பதிவுகள், சங்கக் கவிதைகளுக்கு அழகூட்டுகின்றன.

தாவரங்கள், விலங்குகள் பற்றிய சங்கப் பாடல்களை அவதானிக்கையில் அவை சூழல் சார்ந்த பண்டைத் தமிழரின் இயற்கை அறிதலைப் புலப்படுத்துகின்றன. குறிப்பாகத் தாவரங்கள் பெரிதும் ரசனைக்குரியனவாக இருந்தமையினால், அவை மனிதர்களின் உடல் உறுப்புகளுக்கும், பிற விலங்கினங்களின் உறுப்புகளுக்கும் ஒப்பீடு செய்து சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். குறிப்பாகப் பெண்ணின் உடல் உறுப்புகளுக்கு ஒப்புவமையாகச் சொல்லப்பட்டிருக்கிற உவமைகளில் இடம் பெற்றுள்ள இயற்கைப் பொருட்கள், அழகியலுடன் வெளிப்பட்டுள்ளன. மகளிரின் பல்லுக்கு முல்லை மலரும், கண்ணுக்குக் குவளை மலரும், வாய்க்கு ஆம்பல் மலரும், மூக்குக்கு எள் பூவும், காதுக்கு வள்ளைக்கொடியும், மார்புக்கு கோங்கு மொட்டும், விரலுக்கு காந்தள் மலரும், சீரடிக்கு இலவம் பூ இதழும் உவமையாகச் சொல்லப்பட்டுள்ளன. பறவைகள், விலங்குகள் போன்றவற்றின் உடல் உறுப்புகளுடன் ஒப்பிடப்பட்ட தாவரங்களின் உறுப்புகள், புலவர்களின் இயற்கை குறித்த தோய்வினுக்குச் சான்றாகும். இறால் மீனின் கண்ணுக்கு வேம்பின் பூவும், நண்டின் கண்ணுக்கு நொச்சி அரும்பும், மயிலின் குடுமிக்கு வாகைப் பூவும், மீன்கொத்தியின் அலகினுக்குத் தளவ மலரும், அணிலின் பல்லுக்கு முள்ளி மலரும், புலி நகத்திற்கு முருக்கின் மலரும், கிளியின் முக்குக்கு அவரைப் பூவும், மயிலின் காலடிக்கு நொச்சியிலையும், வெள்ளெலியின் கண்ணுக்குக் குன்றிமணியும், முதலையின் முதுகினுக்கு ஓமை மரத்தின் அடிமரமும், பற்றுக் குறடுக்குப் பாலைக்காயும், தேர் உருளைக்கு மகிழம் பூவும், அருவி வீழ்வது வெள்ளிய ஆடை அசைவதும் என விரிந்திடும் கணக்கற்ற உவமைகள், பண்டைத் தமிழரின் இயற்கை குறித்த புரிதலுக்குச் சான்றுகள். சங்கக் கவிஞர்கள் இயற்கையில் இருந்து பெற்றிருக்கிற நுட்பமும் அசலான தன்மையும், வாசகர்களை

அதிர்ச்சிக்குள்ளாக்கிடும் எனத் தமிழறிஞர் தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை வருணனையுடன் இயற்கைப் பொருள்களை விளிக்கிற இடங்களும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. நொச்சி மரம், தினை, கிள்ளை, ஆந்தை, கோழி, அன்னம், குருகு, காகம், நண்டு, முல்லைக்கொடி, தும்பி, மலை, ஆறு, கடல், மழை, வாடை, ஞாயிரு, திங்கள், மாலை, முல்லை நிலம் போன்றவற்றை விளிக்கிற பாடலடிகள், சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. கவிதையாக்கத்தில் இயற்கையைப் பதிவாக் குதல் என்பது ஒவ்வொரு கணத்திலும் இயற்கையைப் புரிந்து கொண்டாடுகிற மனநிலையுடைய புலவர்களுக்கே சாத்தியம். தாழை மரத்தைக் காட்சிப்படுத்திட முயன்ற நக்கண்ணையாரின் பாடல் வரிகள், இயற்கை குறித்த நுண்பதிவாகும்.

**இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்புமுதிர்வு
நன்மான் உழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களம் கமழும்**

**(நற்றிணை:19)**

நக்கண்ணையார், தாழையை ஓவியமாகச் சித்திரித்துள்ள காட்சிகள், புலவரின் இயற்கை மனநிலையைப் புலப்படுத்துகின்றன. தாழையின் இறால் மீன் போலச் சொரசொரப்பான வெளிப்புறம்; சுறா மீன் கொம்பு போன்ற முள்ளுடன் அமைந்த இலை; யானையின் கொம்பு போலத் தோன்றும் அரும்பு; அது முதிரும்போது பெண் மான் தலை சாய்த்து நிற்பது போன்ற தோற்றம் எனக் காட்சிப்படுத்துகிற கவிஞர், தாழம்பூ மலர்ந்து விழாக் கொண்டாடும் இடமெங்கும் நறுமணத்தைப் பரப்புகிறது என்கிறார். மரத்தின் காட்சி, பூவின் வாசம் என இருவேறு நிலைகளில் அமைந்த பாடலில் இயற்கை பற்றிய காட்சிப்படுத்துதல் ஒப்பீடு அற்றது.

மாசாத்தியாரின் முல்லைத்திணைப் பாடல்கள், இயற்கை எழிலை நுணுக்கமாகக் காட்சிப்படுத்தியுள்ளன. அவர், முல்லைப் பூவினுக்குத் தந்துள்ள அடைகள், இயற்கை மீதான ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. "பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லை", "முல்லை மென்கொடி", "பூத்த முல்லை", "வெருகு சிரித்தன்ன", "முல்லை ஊர்ந்த கல்", "முல்லை மாலை", "முல்லையம் புறவில்", என முல்லைப் பூக்களின் வழியே பெண்ணின் காத்திருக்கிற மனம் பதிவாகியுள்ளது. காட்டுப்பூனை சிரித்தது போன்ற முல்லைப்பூக்கள் என்ற உவமை அழகியலானது. முல்லைப் பூங்கொடியில் ஒளிர்ந்திடும் மலர் அரும்புகள், அக்கொடியின் பற்கள் என்று சொல்வதும், அவை தன்னைக் கண்டு நகைப்பதாகத் தலைவி சொல்வதும் கற்பனையின் உச்சம். குளிர்ந்த நிலத்தில் தேர்ச் சக்கரம் ஊடறுத்துப் பதிந்த சுவட்டில் நீர் விரைந்து செல்லும் காட்சி, பாம்புகள் ஒன்றன் பின் ஒன்றாக ஊர்ந்து செல்வது போன்றுள்ளது என்ற உவமை, கவிஞரின் இயற்கை பற்றிய புரிதலாகும். ஓரியின் கொல்லி மலையின் மேற்குச் சரிவில் இருந்த கொல்லிப் பாவை என்ற அணங்கின் படிமம், காண்பவரை மயக்கியது. புலவர்கள், இளம் பெண்ணின் அழகைக் கொல்லிப்பாவையின் அழகுக்கு ஒப்பிட்டது, இயற்கையின் மீதான மாளாத காதல் ஆகும்.

சங்க காலத் தமிழரின் அன்றாட வாழ்க்கையில் பூக்கள் தனித்த இடத்தைப் பெற்றிருந்தது, இன்றளவும் தொடர்கிறது. சமுதாயத்தின் பழக்கவழக்கம், சடங்குகள், போன்றவற்றில் பூக்களின் பங்கு முக்கியமானது. வெறுமனே அழகியல் சார்ந்து பூக்களை ரசிக்கிற மனநிலை என்பதைவிடப் பூக்கள் பற்றிய நுண் பதிவுகள் சங்கப் பாடல்களில் நிரம்ப இடம் பெற்றுள்ளன. பூவின் வளர் பருவங்களைச் சங்கத் தமிழர் நுணுக்கமாக அறிந்திருந்தனர். நனை, அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ என ஏழு பருவங்களாக அறியப்பட்ட பூக்கள் பற்றிய விவரிப்புகள், கவனத்திற்குரியன. பூக்களுக்கு

மட்டும் உரித்தான மணம், வண்ணம், தண்மை, சுவை பற்றிய சித்திரிப்புகள், சங்கப் பாடல்களில் பொருத்தமாக விவரிக்கப்பட்டுள்ளன. திருமணத்தின்போது முல்லை மலரை நெல்லோடு சேர்த்துத் தூவி, மணமக்களை வாழ்த்தினர்; நாள்தோறும் அந்தி வேளையில் இல்லத்தை மங்கலமாக்கிட நெல்லோடு முல்லைப் பூக்களைத் தூவினர்; திருமணம் முடிந்ததும் தலை நாள் இரவில் மணமக்களின் படுக்கை அறை மலர்களால் அலங்கரிக்கப்பட்டது. குடும்பம் என்ற அலகில் பூக்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. சங்க காலத்தில் நெய்தல், ஆம்பல், குவளை, காவி போன்ற பூக்களைத் தலையில் ஆண்களும் பெண்களும் சூடியிருந்தனர்.

முல்லை சான்ற கற்பின் மெல்லியல் என்ற பாடலடியின் மூலம், முல்லைப் பூ கற்பின் அடையாளமாகக் கருதப்பட்டதை அறிய முடிகிறது. இளைஞன், தான் விரும்பிய பெண்ணின் கூந்தலில் பூவைச் சூடிய செயல், இருவருக்குமிடையில் திருமணம் ஆகிவிட்டது என்பதைக் குறித்தது. பண்டைய நாளில் இளம் பெண்கள் கூந்தலில் மலர் சூடுவது வழக்கம் இல்லை. களவின்போது தலைவன் பெண்ணின் கூந்தலில் பூவைச் சூடியதால் ஏற்பட்ட பூவின் வாசம், அவளைத் தாயிடம் காட்டிக்கொடுப்பதாகச் சங்கப் பாடல் குறிப்பிட்டுள்ளது. குமரிப் பெண், தனது கூந்தலில் பூவைச் சூடும் உரிமையைத் திருமணநாள் முதலாகப் பெறுகின்றாள் என்று தமிழறிஞர் வ.சுப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார்.

மன்னர்களின் அடையாளச் சின்னங்களாகப் பூக்கள் கருதப்பட்டன. பாண்டியன் வேப்பம் பூவையும், சோழன் ஆத்திப் பூவையும், சேரன் பனம் பூவையும் சின்னங்களாகப் பெற்றிருந்தனர். போருக்குச் செல்லும்போது, தன்னுடைய மரபுக்கேற்ற பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்திடும் வழக்கம் இருந்தது. மன்னர்களின் காவல் மரம்பற்றியகருத்தியலும்பூவை அடையாளமாகக் கருதுதலும் இயற்கையுடனான உறவின் தொடர்ச்சியாகும்.

பழந் தமிழர் தமது வாழிடத்தைச் சுற்றி வாழ்கிற பிற உயிரினங்களைக் கூர்ந்து அவதானித்துள்ளனர். வீட்டில் வளர்க்கப்படுகிற பசு, எருது பற்றிய விவரிப்பைவிட வன விலங்குகள் குறித்த இலக்கியப் பதிவுகள், சங்கப் பாடல்களில் நிரம்ப இடம் பெற்றுள்ளன. காட்டுப்பூனை, களிறு, மான், காட்டுப்பன்றி, புலி பற்றிய தகவல்கள் சூழலியல் வாழக்கையைச் சித்திரிக்கின்றன. எருமை, நீர்நாய், ஆமை, நத்தை, சுறா, நண்டு, சங்கு, மீன்கள் போன்ற உயிரினங்கள் பற்றிய தகவல்கள் கவனத்திற்குரியன. யானை, கரடி, புலி, காட்டுப்பன்றி போன்ற வன விலங்குகள் பற்றிய தகவல்கள், புலவர்களின் உற்றுநோக்கலுக்குச்சான்றாகப் பதிவாகியுள்ளன. பூத்துக் குலுங்கும் வேங்கை மரத்தின் மலர்களைக் கண்டு புலி எனத் தவறாக எண்ணி அஞ்சுவது குறித்த காட்சி, சங்கப் பாடல்களில் இடம் பெற்றிருக்கிறது. யானையின் காது அசைகிற இயற்கையான காட்சி, மலைச் சேம்பின் இலை அசைவது போலிருக்கிறது என்ற பாடலடிகள், புலவரின் இயற்கை மனநிலையைப் புலப்படுத்துகின்றன.

**சிலம்பிற் சேம்பின் அலங்கல் வள்ளிலை
பெருங்களிற்று செவியின் மானத் தைஇத்
தன்வரல் வாடை தூக்கும்**

***(குறுந்தொகை :76)***

பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கையைப் பற்றிப்பாடும்போது, அவற்றைப் பற்றித்தாம் அறிந்தவற்றைப் பாடுவதுடன், தங்களுடைய கருத்துக்களையும் இயற்கையின்மீது சுமத்தியுள்ளனர். அதற்காக அவர்கள் எளிய அடைமொழிகளைக் கவிதையாக்கத்தில் கையாண்டிருக்கின்றனர். எப்பொழுதும் விளையாடும் இயல்புடைய குரங்குகள்

பற்றிய விவரிப்புகளில்கூட மனிதர்களின் இயல்புகளைப் பொருத்தி விவரிக்கிற தன்மை, சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

ஐந்திணை நிலத்தில் வாழ்கிற பறவைகள் பற்றியசங்கப்புலவர்களின்கண்ணோட்டம் சிறப்பானது. பறவைகள் பறக்கும் முறை, கூடுகள், கூடு கட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கிற மரங்கள், குஞ்சுகள், குஞ்சுகளை வளர்க்கிற முறை என விவரிக்கப்பட்டுள்ள காட்சிகளை அவதானிக்கையில் பண்டையப் புலவர்களின் உற்றுநோக்கல் புலப்படுகிறது. சில பறவையினங்கள் கூட்டமாக வாழும் இயல்புடையன என அறிந்திட்ட புலவர், பதிவாக்கியிருக்கிற காட்சி, பறவையியல் குறித்த புரிதலின் வெளிப்பாடாகும். நீர்பெயர்ந்து மாறிய செறிசேற்று அள்ளல்/ நெய்தலைக் கொழுமீன் அருந்த இனக்குருகு/ குப்பை வெண்மணல் ஏறி அரசர்/ ஒண்படைத் தொகுதியின் இலக்கித் தோன்றும் (நற்றிணை, 391) என்ற பாடலடிகள் நாரைகள் கூட்டமாகக் கடற்கரை மணல் மேட்டில் தங்கும்போது, அவை வெள்ளைச் சீருடை அணிந்த படையைப் போலத் தோன்றுகின்றன என்று விவரிக்கிற காட்சி, கவின்நயம் மிக்கது. அந்தி நேரத்தில் செக்கர் வானத்தில் கொக்குகள் வரிசையாகப் பறக்கிற காட்சி, செவ்வேளாகிய முருகக் கடவுளின் மார்பில் அணிந்திருக்கிற முத்து மாலையைப் போல இருக்கிறது என்ற அகநானூற்றுப் புலவரின் கற்பனை அழகியலானது. குயிலின் குரலானது யாழிசையோடு சேர்ந்து விடியற் பொழுதில் மக்களைத் துயில் எழுப்புகிறது என்ற பதிவு, இசை ரசனையின் வெளிப்பாடு.

**தீந்தொடை**
**விளரி நரம்பின் நயவரு சீறியாழ்**
**மலிபூம் பொக்கர் மகிழ்குரற் குயிலோடு**
**புணர்துயில் எடுப்பும் புன்தெளி காலை**
**(அகநானூறு:279)**

**இயற்கை சார்ந்த சங்கக் காதல் கவிதை**

சங்கப் பாடல்களில் இயற்கைப் பின்புலத்தில் விரிந்திடும் காட்சிகளின் தொகுப்பில், தமிழரின் அகம் பற்றிய விவரிப்பில் வெள்ளிவீதியாரின் நற்றிணைப் பாடல், குறிப்பிடத்தக்கது. இரவுவேளையில் காதலன் அல்லது கணவனைப் பிரிந்து காமத்தினால் வாடுகிற இளைஞியின் மனவோட்டத்தைச் சித்திரிக்கிற பாடலில் இடம் பெற்றுள்ள இயற்கைக் காட்சிகள் நுணுக்கமானவை.

**திங்களும் திகழ் வான் ஏர்தரும், இமிழ் நீர்ப்**
**பொங்கு திரைப் புணரியும் பாடு ஓவாதே,**
**ஒலி சிறந்து ஓதமும் பெயரும், மலி புனல்**
**பல் பூங்கானல் முள் இலைத் தாழை**
**சோறு சொரி குடையின் கூம்பு முகை அவிழ,**
**வளி பரந்து ஊட்டும் விளிவு இல் நாற்றமொடு,**
**மை இரும் பனைமிசைப் பைதல உயவும்**
**அன்றிலும் என்புற நரலும், அன்றி**
**விரல் கவர்ந்து உழந்த கவர்வின் நல்யாழ்**
**யாமம் உய்யாமை நின்றது**
**காமம் பெரிதே, களைஞரோ இலரே**
**(நற்றிணை. 335)**

திங்கள் வானத்தில் தோன்றுகிறது; கடல் பொங்கும் அலையுடன் ஒலிக்கிறது; கடல்நீர் ஒலி மிகுந்த கரையை உடைத்துப் புறப்படுகிறது; நிரம்பிய நீரையும் பூக்களையுமுடைய கடற்கரைச் சோலையில் முள்ளுடைய இலையைக்கொண்ட தாழையானது, சோறு எடுத்துச் சொரியும் குடம் போலக் கூம்பிய அரும்பு மலர்ந்து நறுமணத்தைக் காற்றில் வீசுகிறது.; காற்று, அம்மணத்துடன் பெரிய பனையில் மோதுகிறது; அல்றில் பறவையானது அப்பனை மரத்தின் உச்சியில் இருந்து வருத்தத்துடன் துன்புறும்; என அருகில் வந்து எலும்பு உருகக் கத்துகிறது; இவையெல்லாம் தவிர, நல்ல யாழானது நான் உயிர் வாழாதவாறு, விரலால் யாமம் வரை இசைக்கப்படுகிறது. இவை யாவற்றாலும் என் காமம் பெரிதாகிறது. அக்காமத்தைக் களைகிறவர் அருகில் இல்லை.

இரவில் தனித்திருக்கிற பெண்ணைச் இயல்பாக நடைபெறுகிற இயற்கையான நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தியிருக்கிற கவிஞர், கவிதையின் கடைசி வரியில் சொல்லியிருக்கிற உணர்வுதான், சங்க அகப் பாடலுக்கும் இயற்கைக்குமான தொடர்பாகும்.

சங்கத் தமிழர்கள் பெரும் வெள்ளம், புயல், மழை, நிலநடுக்கம் போன்றவற்றில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகக் கடுமையாக முயற்சித்தனர். இயற்கையில் இருந்து தன்னை அந்நியப்படுத்தி அறிந்திடும் அறிவு வளர்ச்சியடைந்தபோது, இயற்கையையே கடவுளாகக் கருதி வழிபட வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவேதான் ஐந்திணை நிலப்பரப்பில் மலை, கடல், காடு, நீர்நிலைகள் சார்ந்து வாழ்ந்து வந்த தமிழர்கள் மரங்கள், மலைமுகடுகள், சுனைகள், கடல் கரை, ஆள் புழக்கமற்ற காடுகள், இரவு நேரம் போன்றவற்றில் கட்புலன்களுக்குத் தென்படாத சக்திகள் உறைந்திருப்பதாக நம்பினர். அவற்றை வழிபடுவதன்மூலம் அழிவுகளில் இருந்து விடுபடலாம் என நம்பினர். பண்டைத் தமிழர்களிடம் கடவுள் பற்றிய நம்பிக்கை தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது மர வழிபாடுதான். கடவுள் மரத்த (அகநானூறு, 270:12), எம்மூர் வாயில் உண்டுறைத் தடைஇய்/ கடவுள் முதுமரத்து (நற்றிணை, 83:1-2) போன்ற பாடல் வரிகள், கடவுள் மரத்தில் உறைந்துள்ளார் என்பதைப் புலப்படுத்துகின்றன.

இயற்கையுடன் இயைந்து வாழ்வதைச் சங்கத் தமிழர்கள் முதன்மையான பிரச்சினையாகக் கருதினர். இயற்கையின் பிரமாண்டமான ஆற்றல்கள், மனிதர்களால் விளங்கிட இயலாத சவால்களாகவும் புதிர்களாகவும் விளங்கின. ஒவ்வொரு நாளும் எதிர்கொண்ட இயற்கையின் பேராற்றலுடன் ஒத்திசைந்து வாழ்ந்திட முயன்றபோது, கடவுள் பற்றிய எண்ணம் தோன்றியது. இயற்கைக்கும் தங்களுக்குமான உறவினை புரிந்துகொள்ள விழைந்த தமிழர்கள், ஏதோவொரு மாய ஆற்றல் எல்லாவற்றையும் இயக்குவதாக நம்பினர். மாந்திரிகச் செயல்பாடுகள்மூலம் இயற்கையுடன் தொடர்புகொள்ள முடியுமென்று நம்பியபோது மந்திரம், சடங்குகள் ஏற்படுத்தப்பட்டன. பலிகள் தந்து வழிபாட்டின்மூலம் இயற்கையை அமைதிப்படுத்தலாம் என்ற முயற்சியானது, இயற்கை ஏற்படுத்திய அச்சத்தின் விளைவாகும்.

கடவுள் என்ற கருத்தானது, தமிழர்களைப் பொருத்தவரையில் தொடக்கத்தில் இயற்கையின் பேராற்றலையே குறித்தது. சூர், அணங்கு, சூலி, முருகு போன்ற கடவுள்கள் இயற்கை சார்ந்த இடங்களில் தங்கியிருப்பதான நம்பிக்கை, சங்க காலத்தில் வலுவாக நிலவியது. அணங்கு, வரையரமகளிர், சூர் போன்ற பேராற்றல்கள், குறிப்பாகப் பெண்களைப் பிடித்துக்கொண்டு அவர்களுடைய உடலினை மெலிவித்துக் கேடு செய்கின்றனவாகக் கருதப்பட்டன. அச்சம், வருத்தம் என்று பொருள் தரும்வகையில் அணங்கு, பேய், சூர் போன்ற பெயர்களால் கடவுள்கள் குறிக்கப்பட்டாலும், அவற்றின் பேராற்றல் காரணமாக வணங்கப்பட்டன. மனிதனுக்கு நன்மை செய்யும் பேராற்றலைவிட, கெடுதல் செய்யும் பேராற்றலான இயற்கை பற்றிய சிந்தனைதான், கடவுளை முதன்முதலாக வழிபடவும், சடங்குகள் செய்யவும் தூண்டின.

அணங்கைப் போலவே அச்சம் தருகின்ற இன்னொரு கடவுளான சூர், பொதுவாக மலைப்பகுதியில் செல்கிறவர்களுக்கு வருத்தம் அளித்தது. சூர் என்பது சூர்மகள் எனப்பட்டது. சூரானது மலைச்சுனை, மலைத்தொடர், மலை ஆகிய மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் உறைந்திருந்தது. சூர் குடியிருக்கும் மலையில் முளைத்துள்ள தழையினைத் தீண்டினாலும், வாடச் செய்தாலும், அது வருத்தும் என்ற நம்பிக்கை நிலவியது.

அதனால் வரையாடுகள்கூட சூர் உறைந்திடும் மலையிலுள்ள தழையினை உண்ணாமல் ஒதுங்கி இருந்தன.

**வாடல் கொல்லோ தாமே அவன் மலைப்**
**போருடை வருடையும் பாயா**
**சூருடை அடுக்கத்த கொயற்கு அருந்தழையே?**
**(நற்றிணை:359)**

சூர் கடவுளினால் பற்றப்பட்ட விலங்குகளும் நடுக்கம் அடைகின்ற நிலயை "சூர் உறு மஞ்ஞையின் நடுங்க" (குறிஞ்சிப்பாட்டு:169) என்ற பாடல் வரி, வெளிப்படுத்துகிறது. சூர் இருக்கும் என்று கருதப்படுகிற மலையைவிட்டு, அச்சம் காரணமாக மக்கள் ஒதுங்கி இருந்தனர்.

எல்லா மலைகளிலும் தெய்வங்கள் உறைவதாக நிலவிய நம்பிக்கை, இயற்கையுடன் தொடர்புடையது. அணங்குடை நெடுவரை (அகம்:22), அணங்குடை வரைப்பு (அகம்:372), அணங்கொடு நின்றது மலை (நற்றிணை:165) போன்ற பாடல் வரிகள் மலையில் உறைந்திருக்கும் கடவுளைக் குறிக்கின்றன. அவை மலைகளைக் காக்கும் செயலைச் செய்வதான நம்பிக்கை நிலவியது.. இத்தகைய காவல் தெய்வங்கள் மிகுந்த வலிமையுடையன; மக்களை வருத்தும் இயல்புடையன. மலையில் வாழ்கின்ற பெண் கடவுளான வரையரம்மகளிர் பூக்களில் தங்கிருந்து கண்டார்க்கு அச்சத்தை ஏற்படுத்தினர். மலைக்குகைகளில் உறைந்திருக்கும் வரையரம் மகளிர் வழிப்போக்கர்களின் கண்களுக்குத் தென்படாமல் மறைந்திருக்கின்றனர் (அகம்:342). மலையில் வாழும் கடவுளான அணங்கினுக்குக் குன்றவர் தமது சுற்றத்தினருடன் கூடிப் படையல் இட்டு வழிபடுகின்றனர். பழுத்த மாங்கனிகள், பலாச்சுளைகள், தேன், மூங்கிலில் தயாரிக்கப்பட்ட கள் போன்றவற்றை அணங்கினுக்குப் படைத்துவிட்டுப் பின்னர் அவற்றை உண்டு மயங்கினர்.

**தேன் தேர் சுவைய, திரள் அரை, மா அத்து**
**கோடைக்கு ஊழ்த்த, கமழ் நறுந்தீம் கனி,**
**பயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுளை அளைஇ,**
**இறாலொடு கலந்த, வண்டுமூசு அரியல்**
**நெடுங்கண் ஆடு அமைப் பழுநி, கடுந்திறல்**
**பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டுக்**
**கடவுள் ஓங்குவரைக்கு ஓச்சி, குறவர்**
**முறிதழை மகளிர் மடுப்ப, மாந்தி**
**அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி**
**(அகநானூறு348)**

குறவர்கள், மலையில் உறைந்திருக்கும் கடவுளைத் தம்முடைய பெண்களுடன் சேர்ந்து வழிபட்ட காட்சி விவரிக்கப்பட்டுள்ள இந்தப் பாடலில் மலையே கடவுளாகக் கருதப்பட்ட மனநிலை பதிவாகியுள்ளது.

மரம், செடி, கொடிகள் அடர்ந்திருக்கும் சோலைகளிலும் கடவுள் உறைந்திருப்பதாக நம்பி மக்கள் வழிபட்டதை "காடும் காவும் கவின்பெறு துருத்தியும்" என என நக்கீரர் குறிப்பிடுவதிலிருந்து அறிய முடிகிறது. பெரிய மரங்களின் அடிமரங்களில் கடவுள் இருப்பதாகக் கருதுவது பாடல்களில் இடம் பெற்றுள்ளது. தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில் (அகம்:309), கடவுள் மரத்த முள்மிடை குடம்பை (அகம்:348). பனை, வேம்பு, ஆலமரம், மராமரம், வேங்கை, வாகை, மருது, ஓமை போன்ற மரங்களில் இருக்கும் கடவுள்கள், பிறருக்கு அச்சம் தருவதலால் அவற்றை வணங்கிடுவதற்காகப் பெரிய மலர் மாலைகள் சார்த்தி வணங்கப்பட்டன; பலி கொடுத்துத் தம்மைக் காத்திடுமாறு தொழுதல் நிகழ்ந்தது. ஊரார் கூடுகின்ற பொது இடத்தில் இருந்த முதிய மரமும், பலி கொடுக்கின்ற பீடமும், கடவுள் எழுதிய தூணும் இருந்தன. அவற்றுக்குப் பலி கொடுக்க முடியாதவாறு, ஊரார் வேற்றூர் சென்றுவிட்டால், கடவுள்களும் வேறிடங்களுக்குச் சென்றிடும் இயல்புடையவனாக இருந்தன. மரங்களில் துடியான கடவுள்கள் உறைந்திருப்பதான நம்பிக்கை, நிலவியது.

கடற்கரையில் வளர்கிற மரா மரம், அச்சத்துடன் வழிபடப்படும் தெய்வத்தின் இருக்கையாகவும், தீச்செயல் செய்கிறவர்களைத் திருத்துகிற ஆற்றல் அதற்கு உண்டு என்ற நம்பிக்கை நிலவியது.

நீர்நிலைகளான ஆறு, சுனை, குளம், கடல், கழிமுகம், ஆற்றின் நடுவில் அமைந்திருக்கும் திட்டு போன்றவற்றில் கடவுள் உறைவதாகக் கருதி வழிப்பட்ட நிலை சங்க காலத்தில் வழக்கினில் இருந்தது. துறை எவன் அணங்கும் (ஐங்குறுநூறு:53), அருந்திறற் கடவுள் அல்லன் பெருந்துறைக் கண்டு இவள் அணங்கியோளே (ஐங்குறுநூறு:182) என்ற வரிகள், பெண்களைத் துன்புறுத்தும் நீர்க்கடவுள்களைச் சுட்டுகின்றன. சூர்ச்சுனை (அகம்:91) என்ற வரி சுனையில் இருக்கும் சூர் கடவுளைக் குறிக்கின்றது. அணங்குடை முந்நீர் (அகம்:220), பெருந்துறைப் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ (நற்றிணை:155), கடல்கெழு செல்வி (அகம்: 370) போன்ற வரிகள், கடல் சார்ந்த கடவுளைக் குறிக்கின்றன. பிரமாண்டமான கடல் ஏற்படுத்திய அச்சம் காரணமாக அது வழிபடும் கடவுளானது. கடல், மலை, ஆறு, காடு போன்றவற்றைச் சிதலமாக்காமல், சங்கத் தமிழர் அவற்றுடன் இணக்கமான முறையில் ஒத்துப்போக முயன்றதன் வெளிப்பாடுகள், சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன.

நீர் இன்றி அமையாது உலகு, மாமழை போற்றுதும் எனப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கண்டறிந்திட்ட தமிழரின் பாரம்பரியத்தை இன்று பின்னோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. இயற்கையை எதிர்த்து எதுவும் செய்யலாம் என்ற தவறான புரிதலுடன் இயற்கையை அறிவியலின் துணையுடன் நாசமாக்கிக் கொண்டிருக்கிற கார்ப்பரேட்டுகளும் ஊழல் அரசியல்வாதிகளும் சுயநலவாதிகளும் பெருகிடும் சூழலில், இன்றைய தலைமுறையினர் இயற்கை குறித்துச் சங்கத் தமிழர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள விஷயங்கள் இருப்பது, நவீன வாழ்வின் விநோதம்தான்

**துணைநூல் பட்டியல்**

1. வரதராசன், மு (2018), பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை.
2. மாணிக்கம், வ.சுப (2013), தமிழ்க் காதல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
3. தனிநாயக அடிகள். (தமிழில்: க. பூரணச்சந்திரன்). நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், என்சிபிஹெச், சென்னை, 2014.
4. கிருஷ்ணமூர்த்தி, கு.வி. (2011), தமிழரும் தாவரமும், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.